00106

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
கல்விப்பீடம்
முன்பள்ளிக்கல்வி உயர் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம் 2017/2018
**ESC2217/EPA2517** – கல்வியில் சமூக கலாசார முன்நோக்கு
இறுதிப்பரீட்சை
காலம் : 03 மணித்தியாலங்கள்

திகதி: 28.12.2018 நேரம்: பி.ப 01.30 – பி.ப 04.30

பகுதி I இல் சகல வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதாவது மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

## பகுதி I

01. இலங்கைத் தாய்மார் தொழிலுக்காக வெளிநாடுகளுக்குச் செல்வதால் அவர்களின் பிள்ளைகளுக்கு ஏற்படும் தாக்கங்கள் ஐந்தினை (05) குறிப்பிடுக.

02. "தனிக்குடும்பம்", "கூட்டுக்குடும்பம்" ஆகிய பதங்களை வேறுபடுத்திக் காட்டுக.

03. பிள்ளைகளின் வாசிப்பு ஆற்றலை மேம்படுத்துவதற்காக அவர்களின் பெற்றோர் கட்டாயமாக பின்பற்ற வேண்டிய படிமுறைகள் ஐந்தினை (05) பட்டியலிடுக.

04. நான்கு தொடக்கம் ஐந்து வயது வரையுள்ள பிள்ளைகளின் சமூக விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் ஐந்தினை (05) பட்டியலிடுக.

05. "வைத்தியக் கலாநிதி மொன்டிசூரி அம்மையார் பிள்ளை மையக்கல்விக்குப் பங்களிப்பு மேற்கொண்டிருந்தார்". அவரின் பங்களிப்புக்களை சுருக்கமாக விளக்குக.

06. இலங்கையில் பலவீனமானவர்களாகக் கருதப்படக்கூடிய சிறுவர் குழுக்களை பட்டியலிடுக.

07. முன்பிள்ளைகளுக்கு கற்பிக்கப் பொருத்தமான ரூசோவின் இயற்கைவாத அணுகுமுறைக் கற்பித்தலை சுருக்கமாக விளக்குக.

08. முன்பிள்ளைப் பருவத்தில் பிள்ளைகள் தொலைக்காட்சி பார்ப்பதால் ஏற்படக்கூடிய தாக்கங்கள் ஐந்தினை (05) பட்டியலிடுக.

(8×5 = 40 புள்ளிகள்)

## பகுதி II

09. "ஆரோக்கியமான கற்றலுக்கும் விருத்திக்கும் சகபாடிகளின் இடைவினை அத்தியாவசியமானது"

(i) இக்கூற்றினை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

(ii) முன்பள்ளிப் பிள்ளைகளிடையே இடைவினையை ஏற்படுத்துவதற்கு முன்பள்ளி ஆசிரியர்கள் ஒழுங்குபடுத்தக்கூடிய செயற்பாடுகள் மூன்றினை (03) பட்டியலிட்டு விளக்குக.

(12 புள்ளிகள்)

10. (i) "குடும்பம்" என்னும் பதத்தினை வரையறுக்குக.
(04 புள்ளிகள்)

(ii) "கூட்டுக்குடும்பம்", தனிக்குடும்பம்" ஆகிய எண்ணக்கருக்களை விபரிக்குக
(06 புள்ளிகள்)

(iii) முன்பள்ளிப் பிள்ளைகளை சமூகமயப்படுத்தல் செயலொழுங்கில் குடும்பத்தின் வகிபாகத்தினை விளக்குக.
(10 புள்ளிகள்)

11. "சில பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் பாதுகாப்பு, கரிசனை என்பவற்றில் குறைந்தளவு அக்கறையை வெளிக்காட்டுவது அவதானிக்கப்படுகின்றது"

(i) மேலுள்ள கூற்றினை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா?
(01 புள்ளிகள்)

(ii) உமது விடைக்கான காரணங்களைத் தருக.
(05 புள்ளிகள்)

(iii) மேலுள்ள நிலைமை ஏற்பட செல்வாக்குச் செலுத்தும் காரணங்கள் **மூன்றினைத் (03)** தருக.
(06 புள்ளிகள்)

(iv) இப்படியான நிலைமைகளை தவிர்ப்பதற்கு முன்பள்ளி ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் எவை?
(08 புள்ளிகள்)

12. "அமெரிக்காவின் பின்தங்கிய பிள்ளைகளின் கல்விப்பிரச்சினைகளைத் தீர்க்க ஈடுகட்டும் கல்வி நிகழ்ச்சித்திட்டமானது முயற்சித்தது"

(i) ஈடுசெய்யும் நிகழ்ச்சித்திட்டம் என்பதால் நீங்கள் கருதுவது யாது?
(05 புள்ளிகள்)

(ii) இவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்கள் இலங்கையின் பின்தங்கிய பிள்ளைகளுக்கு உதவுமா? உமது விடைக்கான காரணங்களைத் தருக.
(10 புள்ளிகள்)

(iii) இலங்கையில் ஈடுகட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்த தடையாக அமையும் காரணிகளைக் குறிப்பிடுக
(05 புள்ளிகள்)

13. (i) பிள்ளைகளில் செல்வாக்குச் செலுத்தும் நான்கு (04) வகையான வெகுஜன ஊடகங்களை பெயரிடுக.
(10 புள்ளிகள்)

(ii) மேலே நீங்கள் குறிப்பிட்ட வெகுஜன ஊடகங்களுள் ஏதாவது ஒன்றினைத் தெரிவு செய்து அது பிள்ளைகளின்

(அ) அறிகைப்புலன் விருத்தி

(ஆ) உணர்வு விருத்தி

என்பவற்றில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது என கலந்துரையாடுக.
(10 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*